Previous Date of examination : 03.11.2020

நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

திருவாரூர்

**CC No.25/2020**

2023-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 12-ம் நாள் குற்றமுறையீட்டாளர் தரப்பில் சாட்சி அ..சா. 70 -ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திருமதி ராணி | வயது | /2023 |
| தகப்பனார் பெயர் | | ஜாதி | |
| தொழில் | காவல் ஆய்வாளர் | மதம் | |
| ஊர் | நாகப்பட்டிணம் | தாலுக்கா | |

( 1 வது எதிரி ஆஜர், 2 வது எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச.பிரிவு 317-ன் கீழ் மனுதாக்கல்செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது.)

**அரசு தரப்பில் முதல் விசாரணை** :

**(1)** நான் தற்போது நாகப்பட்டிணம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் தனிப்பிரிவு காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 15.09.2019 ம் தேதி நான் திருவாருர் மாவட்ட குற்றப்பிரிவில் ஆய்வாளராக பணிபுரிந்தபோது குற்ற எண்.1/2019 சட்டப்பிரிவு 120(பி), 406, 420 இ.த.ச. வழக்கினை எனது புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். வழக்கு கோப்பினை பார்வையிட்டதில் இவ்வழக்கில் உதவி ஆய்வாளர் மகாலெட்சுமி அவர்கள் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, எதிரி 1 ஐ கைது செய்து சில சாட்சிகளை விசாரணை செய்திருந்ததும், அதன் பின்னர் காவல் ஆய்வாளர் திருமதி துர்க்கா எதிரி 2 கோவிந்தலெட்சுமியை கைது செய்து தடயங்களை கைப்பற்றி சாட்சிகளை விசாரித்துள்ளதும் தெரியவந்தது. ஏற்கனவே உதவி ஆய்வாளர் மற்றும் ஆய்வாளர் விசாரித்த சாட்சிகளை நான் விசாரித்தபோது அவர்களிடம் சொன்ன வாக்குமூலத்தையே என்னிடமும் சொன்னதால் நான் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை.

**(2)** நான் சாட்சிகள் முகில், ஐஸ்வர்யா, கார்த்திகா, உமாமகேஸ்வரி, ராதிகா, அப்பாஸ், வீரராஜன், அய்யப்பன் ஆகியோரை 15.09.2019 ம் தேதி விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 06.10.2019 ம் தேதி சாட்சிகள் முத்துபாண்டி, சிவரஞ்சன், மார்கரட் சாந்தினி, ஜெய்மார்டீன், அர்ஜூனன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 23.10.2019 ம் தேதி சாட்சி சுகபிரம்மம், வேல்முருகன், புஷ்பவள்ளி, செந்தமிழ் அழகன், ராமச்சந்திரன், பிரேம்குமார் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 07.11.2019 ம் தேதி சாட்சிகள் ராஜன், ரமேஷ், சங்கீதா, ராகினி ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 09.12.2019 ம் தேதி சாட்சிகள் பக்கிரிசாமி, மகேஷ்வரி,தினேஷ், சிவதியாகராஜன், செந்தில், அகிலரன், பாலகுமார் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 12.12.2019 ம் தேதி சாட்சிகள் ராஜேஸ்குமார், பரமேஸ்வரி,

ராஜாஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 09.01.2020 ம் தேதி சாட்சிகள் சுவாமிநாதன், சசி, சாந்தி, புகழேந்திரன் ஆகியோரை விசாரித்தும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் மகாலெட்சுமி அவர்களை விசாரித்தும் வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 10.06.2020 ம் தேதி வழக்கின் விசாரணை முடித்து எதிரிகள் மீது சட்டப்பிரிவு 120(பி), 406, 420 இ.த.ச.-வின் கீழ் இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

**1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1 வது எதிரி ஆஜர். குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை.

**2 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

(1) நான் விசாரித்த சாட்சிகள் எனது விசாரணையில் 2 வது எதிரி வசம் நேரடியாக பணம் கொடுத்ததாகவோ, 2 வது எதிரி பணம் பெற்றுக்கொண்டு வேலை வாங்கி தருவதாக உறுதிமொழி அளித்ததாகவோ கூறவில்லை என்றால் சரிதான். சாட்சிகள் அரவிந்தகுமார், சிவதியாகராஜன், பரமேஸ்வரி, முகில், ஐஸ்வர்யா, அப்பாஸ், முத்துபாண்டி, சுகபிரம்மம், புஷ்பவள்ளி ஆகியோர் எனது விசாரணையில் 2 வது எதிரியான கோவிந்தலெட்சுமியை தங்களுக்கு தெரியாது என எனது விசாரணையில் கூறியுள்ளார்கள் என்றால் 2 வது எதிரியை நேரடியாக தெரியாது என சொல்லியுள்ளார்கள். 1 வது எதிரி 2 வது எதிரி மூலம் வேலை வாங்கி தருவதாக சொன்னதாக சொல்லியுள்ளார்கள்.

(2) சாட்சிகள் சாந்தி, பிரேம்குமார், ராமசந்திரன், மார்கிரேட் சாந்தினி, ராஜன், சங்கீதா, ராகினி, பக்கிரிசாமி, மகேஸ்வரி, தினேஷ், செந்தில், பாலகுமார், அய்யப்பன், சிவரஞ்சனி, அர்ஜுனன், வேல்முருகன், அகிலரசன் ஆகிய அனைவரும் 2 வது எதிரியான கோவிந்தலெட்சமியை பற்றி கேள்விப்பட்டதாகத்தான் சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். சாட்சிகள் ராஜேஸ்குமார், சுவாமிநாதன், ராதிகா, உமா மகேஸ்வரி ஆகிய நால்வரும் 2 வது எதிரியின் பெயரை எனது விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சாட்சி ரமேஷ் எனது விசாரணை காலத்தில் இவ்வழக்கில் 2 வது எதிரியை பற்றி சொல்லவில்லை என்றும், அவர் வாக்குமூலம் கொடுத்தது போல் நான் ஆவணத்தை உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

(3) 2 வது எதிரி 1 வது எதிரியின் வீட்டில் வசித்ததாக கூறுவதற்கு ஆவணங்கள் எதுவும் நான் கைப்பற்றி தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2 வது எதிரி 1 வது எதிரி வீட்டில் வசிக்கவில்லை என்பதால்தான் அது போன்ற ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ஆயுதபடை காவலர் ராஜா என்பவர் 01.03.2019 ம் தேதி மாவட்ட நீதிமன்றத்தில் அரசு பணியில் இருந்தார் என்பதற்கான ஆவணங்கள் எதுவும் நான் கைப்பற்றி இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 01.03.2019 ம் தேதி 1 வது எதிரி வேறு சில நபருடன் நீதிமன்றத்திற்கு வந்தார் என்பது தொடர்பாக சி.சி.டி.வி. பதிவுகள் எதையும் நான் கைப்பற்றி இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

(4) 01.03.2019 ம் தேதி சொல்லப்படுவது போல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றும், சாட்சி ராஜா என்பவர் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட சாட்சி என்றும், 2 வது எதிரியின் மீது குற்றத்தை அதிகபடுத்துவதற்காக உற்பத்தி செய்யப்பட்ட சாட்சி என்று சொன்னால் சரியல்ல.

என்னுடைய விசாரணையில் சாட்சி புகழேந்திரன் 2017 ம் வருடம் சாந்தி என்பவர் மூலம் 2 வது எதிரி கோவிந்தலெட்மியிடம் ரூ.6,50,000/-கடனாக பெற்றதாக கூறவில்லை என்றால் சரிதான், ஆனால் சாந்தி என்பவரிடமிருந்து ரூ.3,00,000/- கடன் பெற்று மகாலெட்சுமியிடம் கொடுத்ததாக சொல்லியுள்ளார். எனது விசாரணையில் 2 வது எதிரிக்கும் புகழேந்திரனுக்கும் இடையே பணபரிவர்த்தனை நடைபெற்றதாக வங்கி கணக்கு விபரங்கள் எதுவும் கைப்பற்றி நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

(5) சாட்சி சசி , த/பெ. பாலமுருகன் என்பவர் 2019 ம் வருடம் மார்ச் மாதத்தில் 1 வது எதிரி சக்திவேலுடன் நீதிமன்றம் சென்றபோது 2 வது எதிரி கோவிந்தலெட்சுமி மண்ணெண்ணெய்யை ஊற்றிக்கொண்டு வந்தது நான் பயந்து கொண்டு வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்று மட்டும்தான் கூறியுள்ளார் என்றால் சரிதான். நீதிமன்றத்திற்குள் சாட்சி சசி சென்றதாகவோ, வேறு நிகழ்வுகளை பார்த்ததாகவோ, 2 வது எதிரியிடம் பேசியதாகவோ என்னிடம் கூறவில்லை என்றால் சரிதான். சாட்சி சசி என்னிடம் கூறியுள்ள விபரம் தவறானது என்றும், அதனால்தான் மார்ச் மாதத்தில் எந்த தேதி என்று அவரால் குறிப்பிட்டு சொல்லஇயலவில்லை என்றால் சரியல்ல.

(6) சாட்சிகள் ரமேஷ், ராஜா, புகழேந்திரன், சசி ஆகியோரின் வாக்குமூலங்கள் நான் சொன்னபடி சொன்ன தேதியில் பெறப்படவில்லை என்றும், 2 வது எதிரி மீது குற்ற செய்கையை அதிகரிப்பதற்காக மேற்படி சாட்சிகளின் வாக்குமூலங்கள் 18.08.2020 ம் தேதி தயார் செய்யப்பட்டு காலதாமதமாக நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 2 வது எதிரி 1 வது எதிரியுடன் சேர்ந்து கூட்டு சதி செய்து வேலை வாங்கி தருவதாக ஏமாற்றி பணம் பெற்றதாக நான் தாக்கல் செய்துள்ள குற்றப்பத்திரிக்கையானது தவறானது மற்றும் முகாந்திரமற்றது என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை** - இல்லை.

ஒம்/- எல். ரகுபதிராஜா,
நீதித்துறை நடுவர்,
திருவாரூர்.